சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை (3 ம் எதிரி சின்னதம்பி ஆஜரில் உள்ளார், 1 ம் எதிரி ராணி மற்றும் 2 ம் எதிரி பாலாஜி மனுவின் பேரில் ஆஜரில் இல்லை)

**<u>பு.த.சா.1 தங்கமணி, த/பெ சண்முகம், வயது.63</u>**

கிருஷ்ணகிரி மெயின் ரோட்டில் பேருந்து நிலையத்தில் இருந்து திருப்பத்தூர் நகர காவல் நிலையம் வரை உள்ள பிரதான சாலையில் சேர் ஆட்டோக்கள் ஓட்ட தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனஙங்கள் போக்குவரத்து நெறிசல் காரணமாக சேர் ஆட்டோக்கள் ஓட்ட தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சேர் ஆட்டோக்கள் அரசு மருத்துவமனை வழியாக பழக்கடை வழியாக சென்று பழைய பேருந்து நிலையம் சென்று அடைகிறது என்றால் சரியல்ல. காலை 08.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மேற்படி சாலையில் கனரக வாகனம் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் காயச்சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் மருத்துவமனையில் கேட்டேன் அவர்கள் தராததால் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் சிகிச்சை பெற்றதற்கான ஓ.பி சீட்டு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஓ.பி சீட்டின் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அசல் தான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து செல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஏற்பட்ட உள்காயங்கள் குறித்து சொல்லியுள்ளேன். எனக்கு வெளிகாயங்கள் ஏற்படவில்லை என்றால் வீக்கம் மட்டும் இருந்தது. நான் சொல்லியுள்ள காயங்கள் குறித்து ஓ.பி சீட்டில் இல்லை என்றால் சரிதான், நான் மருத்துவரை விசாரிக்கபோகிறேன். காயச்சான்றிதழ் கொடுக்க மறுத்ததற்கு மேல் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் மனு கொடுத்திருந்தேன். அந்த மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனக்கு எந்தகாயமும் ஏற்பட வில்லை என்றும், அதனால் தான் என்னை உள்நோயாளியாக அனுமதிக்கவில்லை என்றும், காயச்சான்றிதழும் தரவில்லை என்றால் சரியல்ல, சிறையில் எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போதைய சிறைச்சாலை மருத்துவர் சிகிச்சை அளித்தார். சுமார் 4 நாட்கள் வரை சிகிச்சை பெற்றேன். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் அசல் ஆவனமா என்றால் எனக்கு நினைவில்லை. நான் எந்த அசல் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சிறையில் இருந்து வெளியே வந்தவுடனும், சிகிச்சை

பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அதற்கான காயச்சான்றிதழ் ஏனேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சமயம் எனக்கு காயங்கள் எல்லாம் மறைந்த நிலையில் இருந்தது. எனக்கு முகம், முதுகு, வலது கால் மற்றும் கன்னத்திலும் காயங்கள் இருந்தது. மேற்கண்ட காயங்களை என்னை ஆஜர் செய்த நடுவரிடமும் நான் காண்பித்தேன். என் மீது காவல் துறை அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அது தவறாக பதிவு செய்யப்பட்டது. பின்பு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. சி.சி.எண்.112/2015 என்ற வழக்கில் வீரமணி மற்றும் ராஜேஷ்குமார் ஆகியோர்களும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதே இரண்டு நபர்கள் இந்த வழக்கிலும் எனக்காக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களும் என்னுடன் ஆட்டோ ஓட்டுபர்கள் என்றால் சரிதான்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.08.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.)

Signature of witness.